


Vol.21 | No. 03 | March 2017
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

MOTHER TERESA
PALLIATIVE CARE
A KKSSS INITIATIVE
DIOCESE OF THUCKALAY

## CARING THE UNCARED LAZARUSES



"தவக்கால உண்டியல்
காணிக்கை வழியாக
சமூகம் புறந்தள்ளிய
'லாசரை' காப்போம்."
- ஆயர்



HOME DAY - MINOR SEMINARY




NATIONAL SEMINAR - ST. ALPHONSA COLLEGE



FOUNDATION STONE - THAKKALIVILAI CHURCH

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 21 No : 3 March 2017

# இறையருள்
# IRAIARUL



*Editorial Board*

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**

*Chief Editor*
**Fr. Joseph Santhosh**

*Executive Editor*
**Mr. Soundara Raj**

*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Berlin Athencod**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் திருமுகம்.. | 06 |
| Feast and B'days | 10 |
| தொன் போஸ்கோ | 11 |
| நற்செய்தி நிலையம் | 15 |
| சிறுமலர் | 16 |
| குழந்தை ஈசோ | 17 |
| ஆன்ஜோ விவிலியப் பள்ளி | 20 |
| இல்வாழ்வு | 21 |
| வின்சென்ட் தே பவுல் | 22 |
| புனித அல்போன்சா கல்லூரி | 24 |
| KKSSS | 25 |
| மறைமாவட்டச் செய்திகள் | 26 |
| மறைவட்டச் செய்திகள் | 28 |
| Bishop's Engagements | 32 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/67/2017 28 February 2017

Greetings from Bishop's House, Thuckalay!

We began the holy season of Lent on 27 February 2017 with the imposition of Ashes on our foreheads. It is time of fasting, praying and almsgiving. While we instruct our people to observe this holy season with great devotion, it is opportune that we too reflect upon the importance of this season in our priestly lives. Immersed in our pastoral work, it is possible that we can forget the observance of Lent in our lives. As you are aware, every year, the Holy Father issues a message during the season of Lent in order to exhort the faithful on the importance of this holy season that provides ample opportunities for experiencing the person of Jesus Christ. This year, the message was released on 7th February 2017. On 26th February we reflected the same in the form of my Pastoral letter to the faithful in Tamil and Malayalam. Now I am presenting the same text of the Holy Father for our own personal reading and reflection. It is entitled: "The Word is a gift. Other persons are a gift." The brief message has three sections, namely, the other person is a gift, sin blinds us and the Word is a gift.

**Pope Francis' message for Lent 2017**

Lent is a favourable season for deepening our spiritual life through the means of sanctification offered us by the Church: fasting, prayer and alms giving. At the basis of everything is the Word of God, which during this season we are invited to hear and ponder more deeply. I would now like to consider the parable of the rich man and Lazarus (cf. Lk 16:19-31). Let us find inspiration in this meaningful story, for it provides a key to understanding what we need to do in order to attain true happiness and eternal life. It exhorts us to sincere conversion.

**1. The other person is a gift**

The parable begins by presenting its two main characters. The poor man is described in greater detail: he is wretched and lacks the strength even to stand. Lying before the door of the rich man, he fed on the crumbs falling from his table. His body is full of sores and dogs come to lick his wounds (cf. vv. 20-21). The picture is one

of great misery; it portrays a man disgraced and pitiful.

The scene is even more dramatic if we consider that the poor man is called Lazarus: a name full of promise, which literally means "God helps". This character is not anonymous. His features are clearly delineated and he appears as an individual with his own story. While practically invisible to the rich man, we see and know him as someone familiar. He becomes a face, and as such, a gift, a priceless treasure, a human being whom God loves and cares for, despite his concrete condition as an outcast (cf. Homily, 8 January 2016).

Lazarus teaches us that other persons are a gift. A right relationship with people consists in gratefully recognizing their value. Even the poor person at the door of the rich is not a nuisance, but a summons to conversion and to change. The parable first invites us to open the doors of our heart to others because each person is a gift, whether it is our neighbour or an anonymous pauper. Lent is a favourable season for opening the doors to all those in need and recognizing in them the face of Christ. Each of us meets people like this every day. Each life that we encounter is a gift deserving acceptance, respect and love. The word of God helps us to open our eyes to welcome and love life, especially when it is weak and vulnerable. But in order to do this, we have to take seriously what the Gospel tells us about the rich man.

**2. Sin blinds us**

The parable is unsparing in its description of the contradictions associated with the rich man (cf. v. 19). Unlike poor Lazarus, he does not have a name; he is simply called "a rich man". His opulence was seen in his extravagant and expensive robes. Purple cloth was even more precious than silver and gold, and was thus reserved to divinities (cf. Jer 10:9) and kings (cf. Jg 8:26), while fine linen gave one an almost sacred character. The man was clearly ostentatious about his wealth, and in the habit of displaying it daily: "He feasted sumptuously every day" (v. 19). In him we can catch a dramatic glimpse of the corruption of sin, which progresses in three successive stages: love of money, vanity and pride (cf. Homily, 20 September 2013).

The Apostle Paul tells us that "the love of money is the root of all evils" (1 Tim 6:10). It is the main cause of corruption and a source of envy, strife and suspicion. Money can come to dominate us, even to the point of becoming a tyrannical idol (cf. Evangelii Gaudium 55). Instead of being an instrument at our service for doing good and showing solidarity towards others, money can chain us and the entire world to a selfish logic that leaves

The parable then shows that the rich man's greed makes him vain. His personality finds expression in appearances, in showing others what he can do. But his appearance masks an interior emptiness. His life is a prisoner to outward appearances, to the most superficial and fleeting aspects of existence (cf. ibid., 62). The lowest rung of this moral degradation is pride. The rich man dresses like a king and acts like a god, forgetting that he is merely mortal. For those corrupted by love of riches, nothing exists beyond their own ego. Those around them do not come into their line of sight. The result of attachment to money is a sort of blindness. The rich man does not see the poor man who is starving, hurting, lying at his door.

Looking at this character, we can understand why the Gospel so bluntly condemns the love of money: "No one can be the slave of two masters: he will either hate the first and love the second, or be attached to the first and despise the second. You cannot be the slave both of God and of money" (Mt 6:24).

**3. The Word is a gift**

The Gospel of the rich man and Lazarus help us to make a good preparation for the approach of Easter. The liturgy of Ash Wednesday invites us to an experience quite on our heads, he repeats the words: "Remember that you are dust, and to dust you shall return". As it turned out, the rich man and the poor man both died, and the 20 greater part of the parable takes place in the afterlife. The two characters suddenly discover that "we brought nothing into the world, and we can take nothing out of it" (1 Tim 6:7).

We too see what happens in the afterlife. There the rich man speaks at length with Abraham, whom he calls "father" (Lk 16:24.27), as a sign that he belongs to God's people. This detail makes his life appear all the more contradictory, for until this moment there had been no mention of his relation to God. In fact, there was no place for God in his life. His only god was himself.

The rich man recognizes Lazarus only amid the torments of the afterlife. He wants the poor man to alleviate his suffering with a drop of water. What he asks of Lazarus is similar to what he could have done but never did. Abraham tells him: "During your life you had your fill of good things, just as Lazarus had his fill of bad. Now he is being comforted here while you are in agony" (v. 25). In the afterlife, a kind of fairness is restored and life's evils are balanced by good.

The parable goes on to offer a

to warn his brothers, who are still alive. But Abraham answers: "They have Moses and the prophets, let them listen to them" (v. 29). Countering the rich man's objections, he adds: "If they will not listen either to Moses or to the prophets, they will not be convinced even if someone should rise from the dead" (v. 31).

The rich man's real problem thus comes to the fore. At the root of all his ills was the failure to heed God's word. As a result, he no longer loved God and grew to despise his neighbour. The word of God is alive and powerful, capable of converting hearts and leading them back to God. When we close our heart to the gift of God's word, we end up closing our heart to the gift of our brothers and sisters.

Dear friends, Lent is the favourable season for renewing our encounter with Christ, living in His word, in the sacraments and in our neighbour. The Lord, who overcame the deceptions of the Tempter during the forty days in the desert, shows us the path we must take. May the Holy Spirit lead us on a true journey of conversion, so that we can rediscover the gift of God's word, be purified of the sin that blinds us, and serve Christ present in our brothers and sisters in need. I encourage all the faithful to express this spiritual renewal organizations in different parts of the world, and thus to favour the culture of encounter in our one human family. Let us pray for one another so that, by sharing in the victory of Christ, we may open our doors to the weak and poor. Then we will be able to experience and share to the full the joy of Easter.

Let us heed to the inspiring message of the Pope and enter into this holy season of Lent with great fervour and devotion.

**CONCLUSION**

Lent is a time of grace and let us make every effort to bring the fruits of this season not only in ourselves but also among our people for whom we have dedicated our lives. It is also the season of examinations. Our children in our various institutions are preparing for their final examinations. I suggest that you organise special Holy Qurbana for their intentions and bless them so that they are spiritually prepared to write the examinations. I take this occasion to wish you a fruitful season of Lent!

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

+George Rajendran SDB

Bishop of Thuckalay

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

# ஆயர் திருமுகம்

**ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே மற்றும் சகோதரர் சகோதரிகளே, நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக!**

## இதோ மீண்டுமொரு தவக்காலம்!

இயேசு அனுபவத்தை பெற்றுக் கொள்ள உதவும் வகையில், தவக்காலச் சிந்தனைகளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடுவதுண்டு. அவ்வகையில், இவ்வாண்டுக்கான அவருடைய தவக்கால செய்தியானது பிப்ரவரி 07, 2017 அன்று, "இறைவார்த்தை ஒரு கொடை. ஒவ்வொரு மனிதரும் கடவுளின் கொடை" என்னும் தலைப்பில் வெளியானது. இச்செய்தியானது மூன்று முக்கிய சிந்தனைகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன முறையே, 'ஒவ்வொரு மனிதரும் கடவுளின் கொடை,' 'பாவம் கண்களை குருடாக்குகிறது' மற்றும் 'இறைவார்த்தை ஒரு கொடை.' இவற்றை, 'செல்வரும் இலாசரும்' (லூக் 16: 19-31) என்னும் இயேசுவின் உவமையின் உதவியோடு ஒவ்வொன்றாக விளக்குகிறார்.

## ஒவ்வொரு மனிதரும் கடவுளின் கொடை

தனிமனிதருடைய மதிப்பை நன்றியுணர்வுடன் ஏற்பதில்தான் சரியான உறவு அடங்கியுள்ளது என வலியுறுத்தும் திருத்தந்தை அவர்கள், நம்முடைய வீடுகளின் வாசல்களிலும் தெருக்களிலும் உதவிக்காய் காத்திருக்கும் மனிதரை தொந்தரவுகளாய் பார்க்காமல், மனமாற்றம் ஏற்படுத்துவதற்காகவும் மாற்றங்கள் உருவாக்குவதற்காகவும் கடவுள் அனுப்பிய தூதுவர்களாக பார்த்திட அழைப்பு விடுக்கிறார்.

செல்வரும் இலாசரும் உவமையில், முக்கியமாக இரு கதைமாந்தர்கள் உள்ளனர். ஒருவர் இலாசர், மற்றவர் செல்வந்தர். செல்வரை விட இலாசரே அதிக அறிமுகம் பெறுகிறார். 'உடல் முழுவதும் புண்களுடன் செல்வந்தரின் வீட்டுவாசலின் அருகே கிடந்தார்;' 'செல்வரின் மேசையிலிருந்து விழும் தின்பண்ட

துண்டுகளால் பசியை ஆற்றினார்;' 'அவருடைய புண்களை நாய்கள் நக்கின' என அறிமுகம் பெறும் அவருடைய நிலை மிகவும் பரிதாபத்துக்குரியதாக இருக்கிறது. 'கடவுள் உதவுகிறார்' என்னும் பொருள் கொண்ட லாசருக்கு உதவி செய்ய யாருமில்லை. அவர் புறக்கணிக்கப்பட்டு ஓரங்கட்டப்படுகிறார்.

நற்செய்தி சித்தரிக்கும் இவ் லாசரின் முகம் ஒருவேளை, உவமையில் வரும் செல்வருக்கு அறிமுகம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அம்முகம் நமக்கு அன்னியமானதல்ல. கடவுளின் சாயல் தாங்கிய அம்முகத்தை அன்றாடம் வீடு வாசல்களிலும் தெருவோரங்களிலும் பார்க்கிறோம். அம்முகம் கடவுளால் அன்பு செய்யப்படுகிறது, அவருடைய வாழ்வைக் குறித்து கடவுள் அக்கறை கொண்டுள்ளார். செல்வரின் முகத்திற்கு அன்னியமாகிப்போன அம்முகம் கடவுளுக்கு மிகவும் நெருக்கமானது. அவர், கடவுளின் தூதுவராக அன்றாடம் நம்மை சந்திக்க ஒரு கொடையாக வருகிறார். அவர், தேவையில் உழலும் அண்டைவீட்டுக்காரராக இருக்கலாம். இல்லையென்றால், நமக்கு முன்பின் பழக்கமில்லாத தெருவில் சந்திக்கும் அன்னியராக இருக்கலாம். அவரை வரவேற்க இதயத்தின் வாசல்களை திறக்க வேண்டும். இதயத்திற்குள் உயர்ந்த நிலையை அவருக்கு அளித்து மதிப்பு அளிக்க வேண்டும். அப்போது, கடவுளோடும் மனிதரோடுமான நமது உறவு நிலை சீர்செய்யப்படும், முழுமை அடையும். இல்லையெனில், வெறுமை உள்ளத்தை ஆக்கிரமிக்கும். ஆகையால், வலுவிழந்தவர்களாயும்,பாதுகாப்பற்றவராயும் வீதியிலும், வீடுகளிலும் தவிக்கும் மனிதரை மதிக்கவும் ஏற்கவும் இறைவார்த்தை நம்மை நிர்பந்திக்கிறது. ஆனால் பொருளாசை அரக்கனாய் உள்நுழைந்து இதயக்கண்களை குருடாக்கி பாவவாழ்வு எனும் அகல பாதாளத்திற்குள் சிறைப்பிடித்துவிடும் என்று திருத்தந்தை கூறுகிறார். அதை அவர், செல்வரைக் குறித்து நற்செய்தி கூறும் பகுதியின் உதவியுடன் விளக்குகிறார்.

### பாவம் கண்களை குருடாக்குகிறது

நற்செய்தியில் வரும் ஏழைக்கு லாசர் என்னும் பெயர் ஓர் அடையாளமாக கொடுக்கப்படுகிறது. ஆனால், செல்வந்தனுக்கோ பெயர் எதுவும் கொடுக்கப்படவில்லை. மாறாக, அவன், விலையுயர்ந்த ஆடைகளை அணிந்தான், நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தான் என்பது போன்ற விளக்கங்களே விவிலியத்தில், தரப்படுகின்றன. புனித பவுல் திமொத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகத்தில், "பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர்"

என்கிறார். இதுவே செல்வருக்கும் நிகழ்ந்தது. பொருள் ஆசை, பகைமையை விதைக்கிறது, கட்சி மனப்பான்மையை விளைவிக்கிறது, மனதில் ஐயங்களை உருவாக்கி உறவுகளை சிதைக்கிறது, பொருள் முதன்மையாக்கப்பட்டு அதை மையம் கொண்ட சிலை வழிபாட்டுக்குரிய வாழ்வும் உருவாகி விடுகிறது என திருத்தந்தை கூறுகிறார். மேலும் அவர், பணம் அதிகார மேட்டிமையை உருவாக்கி, காலப்போக்கில் அதுவே எஜமானனாக மாறி, மனிதரை அதற்கு அடிமையாக்கி சிறைப்படுத்திவிடும். பொருள் என்பது, மனிதருக்கு சேவை புரியும் ஒரு சேவகன். தோழமைகளை உருவாக்கி கட்டிக்காக்க உதவும் ஒரு கருவி. எப்போது, பொருள் அந்நிலையை இழக்கிறதோ, அப்போது அது, தனது தந்திரத்தால் தன்னலமே வாழ்வு எனச் சுருங்கச்செய்து, அன்பு அற்ற வரண்ட இதயத்தை உருவாக்கும். அமைதியான வாழ்வுக்கு படிக்கல்லாக மாற வேண்டியது தடைக்கல்லாக மாறிவிடும்.

இதயத்திற்குள் ஏற்படும் இவ் வறட்சியை நற்செய்தி மிக தெளிவாக படம்பிடித்துக் காட்டுகிறது. இதயத்தில் உருவான வெறுமையை மறைக்க, உடலை வெளி வேடங்களால் அலங்கரிக்கிறார் செல்வர். விலையுயர்ந்த ஆடைகளால் போலிவேஷதாரி ஆகிறார். இது, பாவத்திற்கு அடிமையாக்கி விடுகிறது. பொருள் முதன்மை பெற்று, அதற்கு அடிமையாகிப் போய், அன்பு வற்றிப்போய் பாவ வாழ்விற்குள் வீழ்ந்து விடுகிறார். இது ஒவ்வொரு மனிதருக்கும் ஏற்படலாம்.

பொருளாசையால் சிறைப் பிடிக்கப்பட்டவரின் உலகம் தன்னலத்திற்குள் சுருங்கிவிடும். அவரைச் சுற்றி வாழும் எவரும் அவருடைய கண்களுக்குப் புலப்படுவதில்லை. கண்கள் பார்வையிழந்து பாவம் எனும் குருட்டுநிலை பாதிக்கிறது. தேவையில் உழலும் நலிந்தோர் அக்கண்களுக்கு தென்படுவதில்லை. இவ்வாறாக, கண்களை குருடாக்கும் இதய வறட்சியை அகற்ற இறைவார்த்தை அவசியமாகிறது.

### இறைவார்த்தை ஒரு கொடை:

நற்செய்திப் பகுதியைக் குறித்த சிந்தனைகளைப் பகிரும் திருத்தந்தை தொடர்ந்து கூறுகிறார். உவமையில் வரும் செல்வர், இறந்து பாதாளத்தில் வதைக்கப்படுகிறார். அவர் அண்ணாந்து பார்த்தபோது தான் ஆபிரகாமையும் அவரது மடியில் இருக்கும் ஏழை இலாசரையும் காண்கிறார். அப்போது, தன்னுடைய சகோதரர்கள் ஐவர், தான் அனுபவிக்கும் துன்பத்தை அனுபவிக்கக்கூடாது என்னும்

எண்ணம் தோன்றுகிறது. அதனால், இலாசரை தனது சகோதரர்களிடம் அனுப்பி வைக்க வேண்டும் என ஆபிரகாமிடம் பரிந்துரை வைக்கிறான். ஆனால், ஆபிரகாமோ, அவர்களுக்கு இறைவாக்குரைக்க, மோசேயும் இறைவாக்கினர்களும் உள்ளனர் எனவும், அவர்களுக்கு செவிகொடுக் காதவர்கள், இறந்த ஒருவர் உயிர்த்தெழுந்து சென்றாலும் செவிகொடுக்கமாட்டார்கள் என மறுப்பு கூறுகிறார். உயிரோடு இருந்தபோது, வாழ்வுதரும் இறைவார்த்தைகளுக்கு செல்வர் செவிகொடுக்கவில்லை. அதன் விளைவாக இதயம் கடினமாகி, அன்பு வற்றிப்போய்விட்டது. இலாசரும் அன்னியமாகிப்போனார். அவரை மதிப்புடன் நடத்தவும் முடியவில்லை.

ஆகையால், இதயங்களை உருமாற்றும் இறைவார்த்தைக்கு செவிகொடுத்தல் மிக மிக அவசியம் என திருத்தந்தை வலியுறுத்துகிறார். அது, மனங்களை அன்பால் நிரப்பி மனமாற்றத்தை நோக்கி வழி நடத்தும். வாழ்வுதரும் வார்த்தையை உள்ளே நுழையா தவாறு, இதயத்திற்கு பூட்டுப் போடும் போது, பொருளாசை எனும் அரக்கன் உள்நுழைந்து, பாவத்திற்கு அடிமையாக்கி, கண்களை குருடாக்கி விடும். அதன் விளைவாக இதயக்கதவும் சகோதரர் சதோரிகளுக்கு முன்னால் அடைபடும்.

தவக்காலம் ஈசோவோடான உறவை புதுப்பிக்கவும், கடவுளின் வார்த்தைகளைக் கேட்கவும், திருவருட்சாதனங்களைப் பெற்றுக் கொள்ளவும் சகோதரர் சகோதரிகளின் மாண்பினை ஏற்று அன்புடன் வாழவும் ஏற்ற காலகட்டம். உண்மையான மனமாற்றத்தை நோக்கி நம்மை இட்டுச்செல்லும் தூய ஆவியின் ஆற்றலுக்காய் செபித்திட திருத்தந்தை அழைப்பு விடுக்கிறார். இத்தூய ஆவி மனங்களை மாற்றும்.

பொருளாசை எனும் பிடியில் சிக்குண்டு பாவத்திற்கு அடிமையாகி, கண்களை குருடாக்கி, சகோதரர் சகோதரிகளை புறந் தள்ளும் அடிமை வாழ்வை அகற்றி அமைதியின் வழியில் வாழ பெருந்துணையாக நிற்கும் இறைவார்த்தையை தியானிக்க தூய ஆவி நமக்கு துணை புரிவாராக!

அவ்வாறாக, அனைவரையும் மதித்து ஏற்கும் மாண்புமிக்க வாழ்விற்காய் இதயங்கள் தயாரிக்கப்படும் போது, உயிர்ப்பு திருநாள் அர்த்த மிக்கதாகும். அதுவே உண்மையான வெற்றி. அவ்வெற்றியை இயேசு அளித்தார்.

இவ்வாண்டைய தவக்கால உண்டியல் சேமிப்பானது, நம்முடைய மறைமாவட்டத்தில் தொடங்கியுள்ள நோய் தணிப்பு மற்றும் பாதுகாப்பு பணிக்காக

ஒதுக்கப்பட உள்ளது. தேவையில் உழலும் இலாசருக்காய் இதயம் திறக்க அழைக்கும் திருத்தந்தையின் மனநிலையை நாமும் ஏற்று, நம்மிடையே நோயின் வலியால் அவதியுறும் சகோதரர் சகோதரிகளுக்காய் பொருளையும் மனதையும் பகிர்வோம். அது இதயத்தை மாற்றும். அவ்விதயம் இயேசுவின் உயிர்ப்பின் வெற்றியில் பங்கேற்கும் நிலையை நோக்கி உயரும்.

அனைவரையும் தாய் மரியின் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறேன். மிகுதியான அருள்வரங்கள் பெற்று உயிர்ப்புக்காய் நம்மையே நாம் உண்ணாநோன்பாலும், செபத்தாலும், தர்மத்தாலும் தயாரிக்க அவர் நமக்கு துணை புரிவாராக.

தந்தை மகன் தூய ஆவியின் ஆசி உங்களோடு தங்கியிருப்பதாக!

ஈசோவில் அன்புடன்,

+ மார் ஜாரஜ் இராஜேந்திரன் SDB

தக்கலை மறைமாவட்ட ஆயர்

| MAR | BIRTHDAY |
|---|---|
| 03 | Fr. Joseph Santhosh |
| 15 | Fr. Mathew Thekkekutt |
| 15 | Fr. Thomas Powathuparampil |
| 17 | Fr. Chacko Akkathara CMI |
| 20 | Fr. Thomas Sathiyanesan |
| 21 | Fr. Joseph Nedumpuram |
| 26 | Fr. Sumesh Valliyamthadathil |

**FEASTDAYS AND BIRTHDAYS OF REVERAND FATHERS**

| MAR | FEAST DAY |
|---|---|
| 19 | Fr. Jose Muttathupadom |
| 19 | Fr. Joseph Santhosh |
| 19 | Fr. Dency Mundunadackal |
| 19 | Fr. Sajan Nettaponghu |
| 19 | Fr. Josy Puthenpurackal |
| 19 | Fr. Jimmy Thekkekadumathil |
| 19 | Fr. Jinu Thekkethalackal |
| 19 | Fr. Jinoy Thottiyil |
| 19 | Fr. Jose Vayalil |
| 19 | Fr. Prince Maliyil |
| 19 | Fr. Joseph Nedumpuram |
| 19 | Fr. Joseph Anithottam CMI |
| 19 | Fr. Jomon Mangalamadom |
| 19 | Fr. Printo Kurias |
| 19 | Fr. Joseph Ottalankal |
| 19 | Fr. Reju Puthuparampil MCBS |

# தொன்போஸ்கோ திறன் வளர் பயிற்சி மையம், உத்திரங்கோடு

Don Bosco Tech
Skilling India

## அறிமுகம்

தொன் போஸ்கோ திறன் வளர் பயிற்சி நிறுவனமும் (DB. Tech) தக்கலை மறைமாவட்டமும் இணைந்து நடத்தும் இளையோர்களுக்கான திறன் வளர் பயிற்சியானது முஞ்சிறை புனித ஜார்ஜியார் ஆலய வளாகத்திலும் உத்தரங்கோட்டிலும் துவங்கியது. இதன் தொடக்க விழா 26.9.2016 அன்று தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் சச அவர்கள் தலைமையில் முஞ்சிறையில் நடைபெற்றது.

## தொன்போஸ்கோ திறன் வளர் பயிற்சி மைய செயல்பாடுகள்

### ஊக்குவிப்பு பயிற்சிகள்:

27-09-2016 அன்று அருட்பணி ரமேஸ்(DB. Tech, Bangalore) அவர்கள் எவ்வாறு மாணவர்கள் செயல்பட வேண்டும், மாணவர்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வது எப்படி என்ற கருத்துகளை மாணவர்களுக்கு வழங்கி வகுப்பு நடத்தினார்.

### இம்மையத்தின் செயல்பாடுகள்

13-10-2016 அன்று அருட்சகோ. ரோபின் ஜோஸ் அவர்கள் சில வரலாற்றுக் கருத்துகளை கூறி மாணவர்களை ஊக்குவித்தார். அத்தோடு கலைந்துரையாடலும் சிறப்பு விளையாட்டுகளும் நடத்தி மாணவர்களை உற்சாகப்படுத்தினார்.

15-10-2016 அன்று மறைமாவட்ட இளைஞர் பணிக்குழு இயக்குநர் அருட்பணி. பெலிக்ஸ் அவர்கள் இளைஞர்களின் பங்களிப்பு நாட்டிற்கு எவ்வாறு பயன்படுகிறது என்றும், ஆளுமைத்திறன்களை வளர்த்துக் கொள்வது பற்றியும் மதியம் வரை காணொளி மூலமும், செய்கைகள் செய்து காட்டியும் வகுப்புகள் நடத்தினார்.

தமிழ் மண்டல ஒருங்கிணைப்பாளர் சகோ. வின்சென்ட் அவர்களும், மண்டல திட்ட கண்காணிப்பாளர் சகோ. சேவியர் அவர்களும் 4-11-2016 காலைக்கூடுகையில் கலந்துரையாடினர்.

19-11-2016 அன்று முஞ்சிறை அருட்தந்தை அஜீஷ் அவர்கள் 'பணியாற்றும் இடங்களில் நடந்து கொள்வது, எதற்கு வேலைக்குச் செல்கிறோம்? கிடைத்த வேலையை தொடர வேண்டும்' என்ற பல அறிவுரைகளை வழங்கினார்.

### பெற்றோர் ஆசிரியர் கூட்டம்

பெற்றோர் ஆசிரியர் கூட்டம்

மைய ஒருங்கிணைப்பாளர் திரு. சௌந்தரராஜ் அவர்களின் வழிநடத்துதலின் கீழ் 28.10.2016 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தக்கலை மத்திய சபைத் தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் பங்கேற்றார்கள். முஞ்சிறை டிபி டெக் ஆசிரியர் திரு. கென்னடி அவர்களும் கலந்து கொண்டார். கூட்டத்தில் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு, ஆசிரியர்களுக்கு அடுத்தபடியாக பெற்றோர்களின் பங்களிப்பும் மிக அவசியம் என்னும் கருத்துகள் பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும் பயிற்சியின் நோக்கம் பற்றியும் பெற்றோர்களுக்கு எடுத்துரைக்கப் பட்டது. தொடர்ந்து இளைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

16-12-2016 அன்று சென்னையிலிருந்து தென் தமிழகத்தின் DB Tech திரு. அருள் ராஜ் அவர்கள் மாணவர்களிடம் பயிற்சி எவ்வாறு அமைந்தது? தங்கள் கற்று கொண்டவை வாழ்க்கைக்கு பயன்படுவதாக அமைந்துள்ளனவா? என்றும் கேட்டறிந்தார். தானும் இதைப்போன்ற பயிற்சி நிறுவனம் ஒன்றில் பயின்று முன்னேறினேன் என்று தன்னுடைய வாழ்க்கை அனுவங்களை மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டார். வாழ்க்கையில் வரும் ஒவ்வொரு சூழ்நிலைகளுக்கும் ஏற்றார் போல் நாம் வாழ கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்.

## மாணவர்களின் கல்விச் சுற்றுலா

9.12.2016 அன்று திருவனந்தபுரம் விண்வெளி ஆராய்சி மையத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்று செயற்கை கோளின் பயன்கள் பற்றியும் அவை செயல்படுவது



பற்றியும் அறிந்து கொண்டனர். மேலும் தற்போது நடைமுறையில் இருக்கும் செயற்கை கோளின் சக்தி பற்றியும் கேட்டறிந்தனர்.

## கிறிஸ்துமஸ் விழா

23.12.2016 அன்று கிறிஸ் துமஸ்

விழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. தக்கலை மத்திய சபைத் தலைவர் அவர்கள் கிறிஸ்து பிறப்பு பற்றியும் இறைவன் எளிமை கோலத்தில் வந்து உலகிற்கு அமைதியை பறைசாற்றியதைக் குறித்தும் மாணவர்களிடம் எடுத்துக் கூறினார். தொடர்ந்து மத்திய சபைச் செயலர் சகோ. எட்வின்சன் அவர்கள் கிறிஸ்மஸ் விழா என்பது நாம் மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமல்லாது, ஏழைகளுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் உதவி செய்து அவர்களை மகிழ்விப்பது தான் சிறந்த கிறிஸ்மஸ் என்று வாழ்த்துரையாற்றினார். நிறைவில் கேக் வெட்டி கிறிஸ்மஸ் வாழ்த்துப் பாடல் பாடி மாணவர்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

மாணவர்களின் பயிற்சி நிறைவு நாளான 6.10.16 அன்று அருட்பணி. அருள்மாறன் (மண்டல இயக்குநர், டிபி. டெக் பெங்களூர்) அவர்கள் வேலைக்குச் செல்லும் மாணவர்களை ஊக்குவித்து வாழ்த்தி அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

### மையத்தில் பயிற்சி பெற்றோரும் பணியமர்த்தப் பட்டோரும்

பயிற்சியில் சேர்ந்தோர் எண்ணிக்கை - 51 பேர். இதில் 44 பேருக்கு டிபி. டெக் மூலம் சான்றிதழ் வழங்கப்பட்டது. 30 வயதுக்கு மேற்பட்ட 7 பேருக்கு ஓசானாம் சார்பில் சான்றிதழ் வழங்கப்பட்டது.

முழுமையாக பயிற்சியை முடித்தவர்கள் - 38 பேர்

இதுவரை பணியில் சேர்ந்தோர் - 20 பேர்

| இடம் | நிறுவனத்தின் பெயர் | பணியில் |
|---|---|---|
| சென்னை | ஏர்டெலல் நிறுவனம் | 2 |
| கோவை | டேட்டா பில்டுஇந்திய நிறுவனம் | 4 |
| களியல் | எஸ். ஆர் கம்யூட்டர் சென்டர் | 3 |
| மார்த்தாண்டம் | மாண்டிசேரி பள்ளி | 1 |
| கல்லுவிளை | கோல்டு செறாமில் டைல்ஸ் | 1 |
| இரவிபுதூர்கடை | டெறிக் குழுமம் | 2 |
| எறும்புக்காடு | டெறிக் தொழிற்சாலை | 3 |
| படந்தாலுமூடு | ஆர். பி குழுமம் | 3 |
| நாகர்கோவில் | ஒன் ஸ்டாப் ஷாப்பிங் | 3 |

### இரண்டாம் கட்ட பயிற்சி

டிபி. டெக்கின் இரண்டாம் கட்ட பயிற்சியானது 30.1.17 அன்று ஓசானாம் உயர்கல்வி நிலைய ஒருங்கிணைப்பாளர் திரு. சௌந்தர ராஜ் அவர்கள் தலைமையில் இறைவேண்டுதலுடன் குத்து விளக்கேற்றி ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு தொன் போஸ்கோ பற்றியும் டி.பி.டெக்கின் பயிற்சி பற்றியும் தலைவர் அவர்கள் எடுத்துரைத்தார். மேலும் மாணவர்களுக்கு சில அறிவுரைகளை கூறி இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களையும் அறிமுகப்படுத்தினார்.



### பாதுகாவலரின் விண்ணகப் பிறப்பு நாள் கொண்டாட்டம்

தொன் போஸ்கோ பிறந்த நாள்விழா 9.2.17 புதன்கிழமை அன்று மெதப்பன்கோடு, புனித லூர்துகிரி மாதா ஆலயப் பங்குத்தந்தை அருட்தந்தை பிரான்சிஸ் சேவியர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. அருட்தந்தை சேவியர் அவர்கள், இளையோர்கள் வாழ்க்கையில் எப்படி செயல்பட வேண்டும் என்றும் குறிப்பாக அன்னைத் தெரசாவின் அமுத மொழிகளான "வண்ணங்களில் அல்ல் நமது வாழ்க்கை, எண்ணங்களில் தான்" என்று உரையாற்றினார். பின்னர் தொன் போஸ்கோ அவர்களின் வாழ்க்கை வரலாறையும், அவர் வேலையில்லாத இளையோர்களுக்கு எப்படி ஒரு மிகச்சிறந்த வழிகாட்டியாக இருந்தார் என்பதையும் கூறி, மாணவர்களின் சிந்தனை தூண்டும் விதம் விடுகதைகளையும் கேட்டு உற்சாகப்படுத்தினார். மேலும் மாணவர்களும பல கலைநிகழ்வுகளை நடத்தி விழாவை சிறப்பித்தனர்.

திரு. சௌந்தர ராஜ்,
நிலைய ஒருங்கிணைப்பாளர்.

**தவக்கால உண்டியல் காணிக்கை:**

இவ்வாண்டைய தவக்கால உண்டியல் காணிக்கை கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் தொடங்கப்பட்டுள்ள, மதர் தெரசா நோய்த்தணிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைக்காக ஒதுக்கப்பட உள்ளது. தக்கலை மறைமாவட்டத்தைச் சார்ந்த அனைத்து வீடுகளுக்கும் இவ்வுண்டியல் வழங்கப்பட்டு உள்ளது.



# CATECHISM மறைக்கல்வி

"கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி உங்களுக்குள் நிறைவாகச் குடி கொள்வதாக! முழு மனதோடு ஒருவருக்கொருவர் கற்பித்து அறிவுரை கூறுங்கள்."

கொலோ 3:16

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துகள்!

## விவிலிய வினாடி வினாப்போட்டி

2016-2017ஆம் ஆண்டு மறைக்கல்வி மாணவர்களின் விவிலிய வினாப் போட்டி மறைமாவட்ட அளவில் பிப்ரவரி 26 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை படந்தாலுமூடு திரு இருதய அரங்கில் வைத்து நடைபெற்றது. இப்போட்டியில் பங்களவில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பிடித்த மாணவர்கள் கலந்து கொண்டனர். விவிலிய வினாடி வினாப் போட்டி வகுப்பு 5 முதல் 12 வரையுள்ள மாணவர்களுக்கு நடத்தப் பட்டது. போட்டியில் மொத்தம் 475 மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

## தகவல்கள்

தலைமையாசிரியர்கள் கூடுகை மார்ச் 11 சனிக்கிழமை அலுவலகத்தில் நடைபெறும்.

வகுப்பு 1/2 முதல் 9 வரை பயிலும் மாணவர்களுக்கு இரண்டாம் பருவத்தேர்வு மார்ச் 12 ஞாயிற்றுக்கிழமை அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெறும்.

X, XI, XII ஆகிய வகுப்புகளில் பயிலும் மாணவர் களுக்கு இரண்டாம் பருவத் தேர்வு ஏப்ரல் 23 ஞாயிற்றுக் கிழமை மறைவட்டதளங்களில் நடைபெறும்.

அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு,
இயக்குநர்



"தவக்காலம், ஒரு புதிய ஆரம்பம்; சாவின் மீது கிறிஸ்து கொண்ட வெற்றியான உயிர்ப்பு என்ற இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும் ஒரு பாதை"



"தவக்காலம், நம் உடனடி மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்கின்றது. நம் முழு இதயத்தோடு இறைவனிடம் திரும்பி வருவதற்கு நாம் அழைக்கப்படுகின்றோம்"

சிறுமலர்
MISSION LEAGUE



# சிறுமலர் மிஷன் லீக் இயக்கம்...

## மிஷன் லீக் தியானம்

படந்தாலுமூடு மறைவட்டத் திற்குட்பட்ட சிறுமலர் மிஷன் லீக் இயக்க உறுப்பினர்களின் கருத்தரங்கு 05.03.2017 அன்று மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. அனைவரும் இணைந்து இயக்குநர் தந்தை அவர்களுடன் தூய ஆவிப்பாடல் பாட, மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ரோபின்ஸ் அவர்கள் ஒளியேற்றி வைத்து தொடக்க உரையாற்றினார்.

அருட்தந்தை ஷோஜி புத்தன் புரையில் அவர்கள் இறை அழைத்தல் பற்றியும், இறை அனுவம் பற்றியும் எடுத்து ரைத்தார்கள். எ.எஸ்.எம்.ஐ, எப்.சி.சி, எஸ்.எச் அருட் சகோதரிகள் தங்கள் துறவற சபைகளின் வரலாறு, சமூகத்திற்கு அவையாற்றும் பணிகள் பற்றி ஆழமாக சிந்திக்க வைக்கும் வண்ணம் காணொலி வாயிலாக விளக்கினார்கள். 80 மிஷன் லீக் மாணவர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர். பாப்பிறைப் பண்ணுடன் கருத்தரங்கு மாலை 5.00 மணியளவில் நிறைவடைந்தது.

அருட்தந்தை ஷோஜோ,
இயக்குநர்.

## செங்கோட்டைச் செய்திகள்

தீவிரவாதிகளால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அருட்தந்தை டோம் உழிந்நாலில் அவர்களின் விடுதலைக்காக செங்கோட்டை திருத்தொண்டுத்தளம் சார்பில் அருட்தந்தை டோபின் அவர்கள் தலைமையில் 19.2.2017 மிஷன் லீக் உறுப்பினர்கள் பாளை திருமலைபுரம் குருசுமலையில் சிலுவைபாதை வழிபாடு வழியாக செபித்தனர்.

செங்கோட்டை திருத்தொண்டுத்தள வளர்ச்சிக்காக 9.12.17 புளியரை, தெற்குமேடு திரு. இயேசுதாஸ் அவர்கள் இல்லத்தில் அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்கள் தலைமையில் தன்னார்வ பணியாளர்கள் கூட்டம் தொடங்கப்பட்டது. மொத்தம் 12 தன்னார்வ தொண்டர்கள் இணைந்துள்ளனர். இவர்கள் சிறு குழுக்களாக கிராமங்களுக்குச் சென்று பணியாற்றுவர்.

## HOLY CHILDHOOD
## குழந்தை ஈசோ

"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்; ஏனெனில் அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு. (திரு. 107:1)"

**கலைப்போட்டிகள்**

குழந்தை ஈசோ இயக்கத்தின் கலைப்போட்டிகள் ஆறுகாணி மறைவட்டத்திற்கு 05.02.2017 அன்று ஆறுகாணி திருக்குடும்ப ஆலய வளாகத்திலும், மற்ற ஐந்து மறைவட்டங்களுக்கு 08.02.2017 அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கத்திலும் நடைபெற்றது. நமது மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் வருகை தந்து கலந்து கொண்டு குழந்தைகளை ஊக்கப்படுத்தினார்.

இக்கலைப்போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளின் பெயர் பட்டியல் பின்வருமாறு:

<u>ஆறுகாணி மறைவட்டம்</u>

**விவிலிய வசனம் ஒப்புவித்தல்**

| **(மழலையர்–ஆண்கள்)** | | **(மழலையர்–பெண்கள்)** |
|---|---|---|
| அபின் ஷாஜன், மேழக்கோடு | I | ஜெனிபர், பத்துகாணி |
| பெர்லின், ஆறுகாணி | II | அன்னா, நெட்டா |
| ராகுல், பத்துகாணி | III | |
| **செய்கைப் பாடல் (மழலையர்)** | | **குழு நடனம்(குழந்தைகள்)** |
| பத்துகாணி | I | ஆறுகாணி |
| | II | பத்துகாணி |

பேச்சுப்போட்டி

| **(குழந்தைகள்–ஆண்கள்)** | | **(குழந்தைகள்–பெண்கள்)** |
|---|---|---|
| ஆஸ்பின், பத்துகாணி | I | மகிதா, பத்துகாணி |
| ஆஷிக்லால், ஆறுகாணி | II | பின்ஷி, ஆறுகாணி |
| | III | அபியா, நெட்டா |

<u>மஞ்சாலுமூடு மறைவட்டம்</u>

**விவிலிய வசனம் ஒப்புவித்தல்**

| **(மழலையர்–ஆண்கள்)** | | **(மழலையர்–பெண்கள்)** |
|---|---|---|
| அஸ்வந்த், முழுக்கோடு | I | ஆட்ரின்,பள்ளிக்கோணம் |

| | | |
|---|---|---|
| ஜிஜோ, பள்ளிக்கோணம் | II | ரேஸ்மிதா,மஞ்சாலுமூடு |
| ஜேன் டேவிட், மஞ்சாலுமூடு | III | கிரிடா ஜெப்ரி, மாறப்பாடி |
| **செய்கைப் பாடல் (மழலையர்)** | | **குழு நடனம்(குழந்தைகள்)** |
| மாலைக்கோடு | I | மாறப்பாடி |
| முழுக்கோடு | II | மாலைக்கோடு |

பேச்சுப்போட்டி

| (குழந்தைகள்—ஆண்கள்) | | (குழந்தைகள்—பெண்கள்) |
|---|---|---|
| அஸ்ஜித், மஞ்சாலுமூடு | I | லான்ஷி,முக்கூட்டுக்கல் |
| ஆஷிக், முழுக்கோடு | II | ஆஸ்லின், களியல் |
| ஜெருஷ், முக்கூட்டுக்கல் | III | திவ்யா, தெற்றிவிளை |

## நித்திரவிளை மறைவட்டம்

விவிலிய வசனம் ஒப்புவித்தல்

| (மழலையர்—ஆண்கள்) | | (மழலையர்—பெண்கள்) |
|---|---|---|
| அபின்,கிறிஸ்துராஜபுரம் | I | ஜூடி, சீனிவிளை |
| ஜிஜோ, வயலின்கரை | II | தர்ஷினி, வாறுத்தட்டு |
| ஜோபின்ராஜ்,நித்திரவிளை | III | பெறிலிஷா,வயலன்கரை |
| **செய்கைப் பாடல் (மழலையர்)** | | **குழு நடனம்(குழந்தைகள்)** |
| சீனிவிளை | I | வயலின்கரை |
| வயலின்கரை | II | சீனிவிளை |

பேச்சுப்போட்டி

| (குழந்தைகள்—ஆண்கள்) | | (குழந்தைகள்—பெண்கள்) |
|---|---|---|
| ஜிதின், வயலின்கரை | I | ஷானி, சீனிவிளை |
| றீகன், சீனிவிளை | II | டெல்மா வின்ஸ், வயலின்கரை |
| ஆஸ்டின், வாறுதட்டு | III | ஷிர்ஜி,நித்திரவிளை |

## படந்தாலுமூடு மறைவட்டம்

விவிலிய வசனம் ஒப்புவித்தல்

| (மழலையர்—ஆண்கள்) | | (மழலையர்—பெண்கள்) |
|---|---|---|
| பிளாட்வின்,அதங்கோடு | I | அருள் ஷிவானி,அதங்கோடு |

| | | |
|---|---|---|
| ரித்திக்,அண்ணிக்கரை | II | நிவ்யா, அண்ணிக்கரை |
| ஆஷிக்,படந்தாலுமூடு | III | அனயா, பளுகல் |
| **செய்கைப் பாடல் (மழலையர்)** | | **குழு நடனம்(குழந்தைகள்)** |
| பளுகல் | I | பளுகல் |
| படந்தாலுமூடு | II | அண்ணிக்கரை |

பேச்சுப்போட்டி

| (குழந்தைகள்–ஆண்கள்) | | (குழந்தைகள்–பெண்கள்) |
|---|---|---|
| அஸ்வின், பளுகல் | I | தன்ஷியா,அதங்கோடு |
| மனோஜ், படந்தாலுமூடு | II | ஆஷா ராஜ், பளுகல் |
| அபின், அண்ணிக்கரை | III | ஜெஷிபா,கழுவன்திட்டை |

## சூசைபுரம் மறைவட்டம்

விவிலிய வசனம் ஒப்புவித்தல்

| (மழலையர்–ஆண்கள்) | | (மழலையர்–பெண்கள்) |
|---|---|---|
| ஆஷ்லின் டினோ, கிள்ளியூர் | I | தியா, கிள்ளியூர் |
| ரிஷாந்த், மாங்கரை | II | ரக்ஷனா, பிளாங்கரை |
| வின்ஷி ரோஜர்,சூசைபுரம் | III | அர்லின் ஜினோஷா,சூசைபுரம் |
| **செய்கைப் பாடல் (மழலையர்)** | | **குழு நடனம்(குழந்தைகள்)** |
| சூசைபுரம் | I | மாங்கரை |
| மாங்கரை | II | கிள்ளியூர் |

பேச்சுப்போட்டி

| (குழந்தைகள்–ஆண்கள்) | | (குழந்தைகள்–பெண்கள்) |
|---|---|---|
| அப்ரோலின் டோமி, கிள்ளியூர் | I | அஜய்ஷா டாபினி, சூசைபுரம் |
| ரெஜின், பாலப்பள்ளம் | II | ரெமிதா, கிள்ளியூர் |
| பென் கிறைஸ்ட், மாங்கரை | III | பென்ஷிகா, மாங்கரை |

## தக்கலை பிலாங்காலை மறைவட்டம்

விவிலிய வசனம் ஒப்புவித்தல்

| (மழலையர்–ஆண்கள்) | | (மழலையர்–பெண்கள்) |
|---|---|---|
| அமல்மண்டுபல்,நாகர்கோயில் | I | அலன்யா பாபு,நாகர்கோயில் |

| | | |
|---|---|---|
| அஜின்,பரைக்கோடு | II | வர்ஷயா, காட்டாத்துறை |
| ரித்திக்ரோஷன்,காட்டாத்துறை | III | அனிஷ் , கைசாலவிளை |
| **செய்கைப் பாடல் (மழலையர்)** | | **குழு நடனம்(குழந்தைகள்)** |
| நாகர்கோயில் | I | நாகர்கோயில் |
| கைசாலவிளை | II | தக்கலை |

பேச்சுப்போட்டி

| (குழந்தைகள்–ஆண்கள்) | | (குழந்தைகள்–பெண்கள்) |
|---|---|---|
| ஆஷிகன், காட்டாத்துறை | I | அஜய்ஷா டாபினி, சூசைபுரம் |
| ஜியோனா ஜார்ஜ்,நாகர்கோயில் | II | பபிஷா,பரைக்கோடு |
| தரண், பிலாங்காலை | III | ஜோமி அமலா, தக்கலை |

கலைப்போட்டிகளில் கலந்து கொண்ட அனைத்து மழலைச் செல்வங்களுக்கும், பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும், ஒருங்கிணைத்த ஒருங்கிணைப்பாளர்களுக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

அருட்தந்தை ஜோமோன்,
இயக்குநர்.

## ஆன்ஜோ விவிலிய மழலையர் வகுப்பு

எமது பங்கில் உள்ள சிறு குழந்தைகளின் ஆன்மீக வளர்ச்சிக்குரிய நோக்கத்துடன் புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறையில் 05.02.2017 அன்று ஆன்ஜோ விவிலிய மழலையர் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதன் துவக்கவிழா (எஸ்.டி கான்வெண்ட்) அன்பகத்தில் மாலை 4 மணி யளவில் பங்குத்தந்தை அஜீஸ் அட்டியில் அவர்கள் தலைமையில் ஒளியேற்றுதலுடன் நடைபெற்றது. அருட்சகோதரிகள், ஆசிரியர்கள் மற்றும் 20 மாணவ செல்வங்கள் கலந்து கொண்டனர். தந்தை அவர்கள், சிறுபருவத்திலேயே குழந்தைகள் பயபக்தியுடன் விவிலிய வார்த்தைகளை நன்கு புரிந்து படித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு என தலைமையுரையாற்றினார். அருட்சகோ. தீபா எஸ்.டி அவர்கள், குழந்தைகள் கற்கும் விவிலிய வார்த்தைகளை பெற்றோர்களுக்கு பகிர்தல் வேண்டும் என்று உரையாற்றினார். நிறைவில் அருட்சகோ. றீனாமேரி அவர்கள் இனிப்பு வழங்கினார். வகுப்புகள் விவிலிய வார்த்தைகள் வாசித்தல், மனப்பாடம் செய்தல், விவிலிய விளையாட்டுகள் என ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4 மணி முதல் 5 மணிவரை அருட்சகோதரிகளின் பராமரிப்பில் நடைபெற்றுவருகிறது.



FAMILY APOSTOLATE

# குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

### மது அடிமைகள் மறுவாழ்வு மையம்

கல்லுவிளை மதுஅடிமைகள் மறுவாழ்வு மையம் ஒவ்வொரு வாரமும் செவ்வாய் முதல் வெள்ளிக் கிழமை வரை காலை 9.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை செயல்பட்டு வருகிறது. இந்நாட்களில் மருத்துவரை தொடர்பு கொண்டு ஆலோசனைகளும், சிகிட்சைகளும் பெற்றுகொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

### திருமண தயாரிப்புப் பயிற்சி

திருமண தயாரிப்புப் பயிற்சி வகுப்பு மார்ச் 17 காலை 10.00 மணி முதல் 19 மாலை 4.00 மணி வரை நடைபெறும். நிறைவு நாள் மதியம் 2.00 மணி முதல் பயிற்சியில் கலந்து கொள்ளும் பெற்றோர்களுக்கான வகுப்பும் நடைபெறும். பயிற்சிக்கு வரும்போது பங்குத்தந்தையிடமிருந்து பயிற்சி படிவம் வாங்கி பூர்த்தி செய்து கொண்டு வரவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

### மாதர் ஜோதிஸ்

பிப்ரவரி 26 ஞாயிறு மதியம் 2 மணிக்கு மாதர் ஜோதிஸ் இயக்க பொறுப்பாளர்களுக்கும், வழிகாட்டிகளுக்கும் கூட்டம் நடைபெற்றது. அருட்சகோ. மேரி ஜாய்ஸ் வகுப்புகளை நடத்தினர். 2017 ஆம் ஆண்டு செயல்திட்டம் வழங்கப்பட்டது. இயக்குநர் தந்தை அவர்கள் செயல்திட்டத்தை விளக்கி கூறினார். ஆயர் அவர்களின் வாழ்த்துக் கடிதமும் வாசிக்கப்பட்டது. செயல்திட்டம் கிடைக்காதவர்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். துணை இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அவர்களும் கலந்து கொண்டார்.

### வந்து பாருங்கள் செபக்குழு

வந்து பாருங்கள் செபக்குழுவின் 116-ஆம் ஒருநாள் தியானம் பளுகல் பங்கில் பிப்ரவரி 11 அன்று நடைபெற்றது. அடுத்த தியானம் மார்ச் 11 சனிக்கிழமை நடைபெறும்.

### தசாம்ச கிளப்

தசாம்ச கிளப்பின் பிப்ரவரி மாத கூடுகை பிப்ரவரி 12 ஞாயிற்றுக்கிழமை கழுவன்திட்டை திரு. இராஜசேகரன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. ஏழை ஒருவரின் இல்லம் அமைக்க இடம் வாங்க உதவியாக ரூ 50,000 வழங்க தீர்மானிக்கப் பட்டது. அடுத்த கூடுகை திரு. ஜார்ஜ் ஜோசப் மணிவிளை அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.

### தந்தையர் நல்வாழ்வு இயக்கம்

தந்தையர் நல்வாழ்வு இயக்கம் தொடங்கப்படாத பங்குகளில் விரைவாக தொடங்க செயல்படுத்திட அருட்தந்தையர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அருட்தந்தை ஜோசப் நெடும்புறம், இயக்குநர்.




# தக்கலை மத்திய சபைச் செய்திகள்

## சூசைபுரம் வட்டார சபை

### டி. என். என் சந்திப்பு

சூசைபுரம் வட்டார சபை ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களின் வழிகாட்டுதலில் 19.02.2017 ஞாயிற்றுக்கிழமை காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையம் சந்திக்கப்பட்டது. பிறரன்பு பணியை ஊக்குவிக்கும் வகையில் காரோடு பங்குத்தந்தை அருட்தந்தை ஜேம்ஸ் அவர்கள் மனநோயாளிகளின் தேவைகள் மற்றும் அவர்களை வழிநடத்துவது எவ்வாறு என்பது பற்றிய தியான உரையாற்றி புத்துணர்வளித்தார். பின்னர் வட்டாரசபைத் துணைத்தலைவர் சகோ. அருள்தாஸ் ரூ.10.000/ உதவித்தொகை வழங்கினார். வட்டாரசபைத் தலைவர் சகோ. சோனிக் ரீகன் நிகழ்வுகளை ஒருங்கிணைத்து நடத்தினார். இந்நிகழ்வில் சூசைபுரம் வட்டார சபைக்குட்பட்ட 35 வின்செந்தியர்கள் கலந்துகொண்டனர்.

### இராஜாவூர் மனநோயாளிகள் சந்திப்பு

தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயத்தில் செயல்படும் வின்சென்ட் தே பவுல் சபை மற்றும் பங்குமக்கள் இணைந்து 25.02.2017 அன்று இராஜாவூர் மனநோயாளிகள் மற்றும் ஏழை மக்களைச் சந்தித்து அவர்களுக்கு உணவை சமைத்து பரிமாறினர். கிளைச்சபைத்தலைவர் சகோ. செல்வராஜ் அவர்கள் தலைமையில் 35 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## படந்தாலுமூடு வட்டார சபை

### பொன்விழா நிறைவில்..

படந்தாலுமூடு வட்டார சபையின் கீழ் செயல்படும் படந்தாலுமூடு திரு இருதய கிளைச்சபை 11.2.1967 அன்று தொடங்கப் பட்டது. இதன் 50 ஆண்டு நிறைவு விழா மார்ச் 12 அன்று காலை ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் தொடங்கி, குருகுல முதல்வர் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெறுகிறது. விழாவில் பொன்விழா நினைவு மலர் வெளியிடப்படுவதோடு, கிளைச்சபைக்காக உழைத்த முன்னாள் வின்செந்திய உறுப்பினர்களும் கௌரவிக்கப்படுகிறார்கள். அனைவரும் வருகை தந்து சிறப்பிக்க அழைக்கிறோம்.

## நித்திரவிளை வட்டார சபை

முன்னாள் வட்டாரசபைச் செயலர் அவர்களின் திருமணத் திற்காக 6.2.2017 அன்று ரூ.3000

திருமண உதவி வட்டார சபை சார்பில் வழங்கப்பட்டது.

### ஆயர் சந்திப்பு

தக்கலை மத்திய சபையின் கீழ் செயல்படும் நிறுவனங்களை ஆயர் அவர்கள் சந்தித்து ஆய்வுசெய்யும் நிகழ்வு பிப்ரவரி 5 ஞாயறன்று மதியம் 2.00 மணிக்கு உத்தரங்கோடு ஓசானாம் உயர்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. முதலில் ஆயர் அவர்களுக்கு வரவேற்பளிக்க ஆயர் அவர்கள் ஒவ்வொரு குழுக்களையும் சந்தித்தார். மத்திய சபைத்தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் வரவேற்றுப்பேசினார். தேசியசபைத் துணைத்தலைவரும், மத்திய சபை மூத்த தலைவருமான சகோ. சௌந்தரராஜ் அவர்கள் முன்னிலை வகித்தார். முதலில் டி.பி டெக் மற்றும் ஓசானாம் உயர்கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களை சந்தித்து செயல்பாடுகள் பற்றி கேட்டறிந்து கோப்புகளை ஆய்வு செய்தார். பின்னர் ஆயர் அவர்கள் தலைமையில் மத்திய சபை கூட்டம் நடைபெற்றது. கணக்குகள், அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டது. மத்தியசபை செயல்பாடுகள், கிளைச்சபைச் செயல்பாடுகள், கணக்குகள் அனைத்தையும் ஆய்வு செய்து பணிகளுக்கு பாராட்டும் அளித்தார். தொடர்ந்து மத்தியசபை நிர்வாகக்குழுவினரை சந்தித்து ஆலோசனைகள் கூறி செயல்பாடுகளுக்கு பாராட்டும் கூற ஊக்கமளித்தார். இதில் மத்தியசபை உறுப்பினர்கள், மற்றும் ஓசானாம் உயர்கல்வி நிலைய பணியாளர்கள், மாணவர்கள் என சுமார் 45 பேர் கலந்து கொண்டனார்.

சகோ. ஷாஜன்,
செய்தித்தொடர்பாளர்.

**தக்கலை மறைமாவட்த்திற்கான கூடுதல் தனிச்சட்டங்கள்:**

தக்கலை மறைமாவட்டத்தின் அருட்பணிகளையும் திருத் தொண்டுப் பணிகளையும் ஒருங்கிணைத்து, முறையாக நடைமுறைப்படுத்தும் நோக்குடன், தக்கலை மறைமாவட்டத்திற்கான தனிச்சட்டங்கள் வகுக்கப்பட உள்ளன. **"More Particular Laws of the Eparchy of Thuckalay"** என்னும் தலைப்பில் வெளிவரவிருக்கும் தனிச்சட்ட முன்வரைவுக்கான முதல் கூட்டம் பிப்ரவரி 23, 2017 அன்று, ஆயர் இல்ல, எவுப்பிராசியாம்மா அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. சட்டம் வகுப்பதற்கான குழுவின் தலைவராக, முனைவர் அருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் செயல்படுவார்கள். அருட்தந்தை மாத்யு குழிஞ்ஞாலில் மற்றும், அருட்தந்தை டென்சி முண்டு நடய்க்கல் ஆகியோர் இதர உறுப்பினர்களாக இருப்பார்கள்.

# புனித அல்போன்சா கலைமற்றும் அறிவியல் கல்லூரி

## தேசிய கருத்தரங்கம்

புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 10.2.207 வெள்ளிக்கிழமையன்று வணிகவியல் துறை சார்பாக தேசிய கருத்தரங்கம் நடத்தப்பட்டது. கல்லூரி நிறுவனரும் தக்கலை மறைமாவட்ட ஆயருமான மார் ஜார்ஜ் இராஜேந்திரன் சச அவர்கள் தலைமையுரை வழங்கினாார். முதல்வர் அருட்தந்தை முனைவர் ஜாண் போஸ்கோ அவர்கள் தொடக்க உரையாற்றினார். அருட்தந்தை டென்சி வர்கீஸ் அவர்கள் வரவேற்க, தாளாளர் அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் வாழ்த்திப் பேசினார். பாளையங்கோட்டை புனித சவேரியார் கலைக் கல்லூரி வணிகவியல் துறை தலைவரும் மாணவர் குழுத் தலைவருமாகிய முனைவர் யூஜின் பிராங்கோ அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்

"தற்கால வணிகத்தின் வாய்ப்புகளும் சவால்களும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. கர்நாடக, கேரளா, சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய பல்வேறு பல்கலைகழகங்களிலிருந்து வருகை தந்த ஆய்வு மாணவர்களும் பேராசிரியர்களும் ஆய்வுக் கட்டுரை வழங்கி கருத்துகளை வழங்கினர். விழாவில் சிறந்த ஆராய்ச்சி கட்டுரைகளின் தொகுப்பாக சிறப்பிதழ் "இன்டர்நேஷனர் ஜோர்னல் ஆப் மேனேஜ்மென்ட் & பிசினஸ் ஸ்டடிஸ்" என்ற நூலும், பிற ஆராய்சி கட்டுரைகளின் தொகுப்புகள் அடங்கிய "இன்றைய வணிகத்தின் வாய்ப்புகளும், சவால்களும்" என்ற நூலும், ஆராய்ச்சி கட்டுரைகளின் சுருக்க குறிப்பேடு "சோவனீர்" என்ற புத்தகமும் மற்றும் வணிகவியல் துறை சார்பில் "ஆல்காம் டேலன்டர்ஸ்" என்ற இதழும் வெளியிடப்பட்டது. விழா முடிவில் துறைத்தலைவர் முனைவர் சிவநேசன் அவர்கள் நன்றி கூறினார். நிகழ்வை பேராசிரியர் மதன்குமார் அவர்கள் ஒருங்கிணைத்தார்.

## காசநோய் விழிப்புணர்வு பேரணி

கருங்கல் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் மாவட்ட நெஞ்சக நோய் மையம் ஆசாரிப்பள்ளமும் இணைந்து காசநோய் விழிப்புணர்வு பேரணி நடத்தினர். 27.2.2017 காலையில் நடத்தப்பட்ட இப்பேரணியை கல்லூரித் தாளாளர் பேருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமை வகித்தார்.

கருங்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி வினிசா மற்றும் காசநோய் முதுநிலை சிகிட்சை மேற்பார்வையாளர்கள் திருமதி சோபி மற்றும் திரு. ஆன்றோ ஆனந்த், சுகாதார பார்வையாளர் திருமதி ஆன்சி ஆகியோர் றிஜோ முன்னிலை வதித்தனர். அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் சின்னத்தாய் அவர்கள் கொடியசைத்து பேரணியை தொடங்கி வைத்தார். கல்லூரி மாணவ மாணவிகள் விழிப்புணர்வு அட்டை ஏந்தி கோஷங்களை எழுப்பி பேரணியில் கலந்து கொண்டனர். கல்லூரி பேராசிரியர்களும், பணியாளர்களுயும் பேரணியை வழிநடத்தினர்.

அருட்தந்தை ஆன்றணி ஜோஸ்,
தாளாளர்.

## படுக்கையிலிருக்கும் நோயாளிகளுக்காக ஒரு நாள்

படுக்கையிலிருக்கும் நோயாளிகளின் வலி, பயம், தனிமையிலிருந்து விடுப்பட்டு அன்பு, அரவணைப்பு மற்றும் ஆதரவளித்திட மக்களிடம் தங்களால் இயன்ற உதவிகளை கேட்டு கன்னியாகுமரி சமூகசேவை சங்கத்தின் தலைமையில் நாகர்கோவில் பகுதியில் 18 பிப்ரவரி அன்று ஒருநாள் மட்டும் வீதி வீதியாக நிதி திரட்டினர். இந்நிகழ்வில் தக்கலை மறைமாவட்டத்தை சார்ந்த அருட் தந்தையர்கள், அருட் கன்னியர்கள், KKSSS பணியாளர்கள், நாஞ்சில் கத்தோலிக்க கல்லூரி மாணவர்கள், மறை மாவட்டத்தை சார்ந்த பொதுநிலையினர் என 166 பேர் பங்கெடுத்தார்கள். இவாகள் 45 குழுக்களாக பிரிந்து 10 மணி முதல் இரவு 8.00 மணிவரை நிதி திரட்டினார்கள். இந்நிகழ்வை தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் அவர்கள் செபம் செய்து துவங்கி வைத்தார். இயக்குநர் தந்தை அவர்கள் ஆசியுரை வழங்கினார். அன்றைய தினம் வசூலிக்கப்பட்ட தொகையானது அன்னை தெரசா நோய் தணிப்பு பாதுகாப்பு அலகின் வளர்சிக்காக அளிக்கப்பட்டது.



# மறைமாவட்டச் செய்திகளும் நிகழ்வுகளும்

**அருட்தந்தை ஜான் குளத்துங்கல் அவர்களுக்கு முனைவர் பட்டம்:**

திருச்சபைச் சட்டத்தில், முனைவர் பட்டப்படிப்பை, அருட்தந்தை ஜான் குளத்துங்கல் அவர்கள், இத்தாலியின் வெனிஸ் பகுதியில் அமைந்த பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டு வந்தார். அவருடைய முனைவர் பட்டத் திற்கான இறுதி விவாதமானது, பிப்ரவரி28, 2017 அன்று வெனிஸ் -இல் வைத்து நடைபெற்றது. கீழைத் திருச்சபைகளுக்கான சட்ட புத்தகத்தின் 322 ஆவது, சட்டத்தை மையமாகக் கொண்டு தமது படிப்பை மேற்கொண்ட அருட்தந்தை அவர்கள், இந்தியாவில் செயல்படும் மூன்று தனிச்சபைகள் (இலத்தீன், சீரோ மலபார், சீரோ மலங்கரா) எவ்வாறு ஒன்றிணைந்து திருத் தொண்டுப்பணியை செய்ய முடியும் என்பதைக் குறித்து விரிவாக கற்றுத் தேர்ந்து, சில பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளார். வெற்றிகரமாக தமது படிப்பை முடித்த அருட்தந்தை அவர்களுக்கு, பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் அளித்து கவுரவித்தது.

**பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர்கள் மறைமாவட்டத்தை சந்திப்பு:**

பிரான்சு நாட்டின் பாரிஸ் நகரில் Oeuvre d'Orient இயக்கத்தை சேர்ந்த டோமினிக் மற்றும் இஸபெல்லா ஆகியோர், பிப்ரவரி 13-14, 2017 இல் தக்கலை மறைமாவட்டத்தை சந்தித்தார்கள். இவர்கள், மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம், கழுவந்திட்டை புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம், அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலயம், சிறுமலர் ஆலயம் மஞ்சாலுமூடு, முக்கூட்டுக்கல் புனித மரியா இளங்குருமடம், காரோடு டி.என். என். மற்றும் நித்திரவிளை கருணை இல்லம் ஆகியவற்றை சந்தித்தார்கள்.

**குருக்களுக்கான புத்தணர்வூட்டல் முகாம்:**

தக்கலை மறைமாவட்டத்தில் பணியாற்றும் அனைத்து குருக்க ளுக்காகவும் மார்ச் 20, 21 (2017) தேதிகளில் தக்கலை சங்கமத்தில் வைத்து புத்துணர்வூட்டல் முகாமானது நடத்தப்பட உள்ளது. முகாமானது, மார்ச் 20 காலை 9.00 மணிக்குத் தொடங்கி, 21 பிற்பகல் 3.00 மணிக்கு நிறைவு பெறும். முகாமை, ஊட்டி மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஞானதாஸ் அவர்கள் வழிநடத்த இருக்கிறார்.

**சீனாய் தியான மைய மந்திரிப்பும் தொடக்கவிழாவும்:**

கல்லுவிளையில், அமைக் கப்பட்டு வரும் சீனாய் தியான மையத்தின் தொடக்கவிழாவும் கட்டிட மந்திரிப்பும் மே 7, 2017 அன்று நடைபெற இருக்கிறது.

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களும், முரிங்நூர் தியான மையத்தைச் சார்ந்த சகோ. ஜோசப் சுலைமான் அவர்களும் இந்நிகழ்வுக்காக அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**அருட்தந்தை சிஜு புத்தன்புரையில் அவர்களுக்கு பிரிவு உபசார விழா:**

அருட்தந்தை சிஜு புத்தன் புரையில் நம் மறைமாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக பல்வேறு நிலைகளில் பணி புரிந்தார். இவர், பத்துகாணி மற்றும் அணமுகம் பங்குகளின் பங்குதந்தையாகவும் இருந்தார். அவருக்கு, பிப்ரவரி 16, 2017 அன்று பிரிவு உபசாரம் நடத்தப்பட்டது. தற்போது அவர், இராமநாதபுரம் மறைமாவட்டத்தில் பணிபுரிவதற் காக சென்றிருக்கிறார்.

**இதர தகவல்கள்**

உதவி ஆயராக தேர்ந்தெடுக்கப்பட்ட, அருட்தந்தை தோமஸ் தறையில் அவர்களின் ஆயர் திருநிலைப்பாடு, ஏப்ரல் 23, 2017 அன்று பிற்பகல் 2 மணிக்கு சங்ஙனாசேரி ஆயர் பேராலயத்தில் வைத்து நடைபெறும். இவர், பிப்ரவரி 07, 2017 அன்று தக்கலை ஆயர் இல்லத்திற்கு வருகை தந்தார். ஆயர், கூரியா உறுப்பினர்களோடு மறைமாவட்டம் சார்பில் சேர்ந்து வரவேற்பு கொடுத்ததோடு, வாழ்த் துகளையும் செபங்களையும் தெரிவித்தனர்.

**இணையதள திருத்தொண்டு:**

சீரோ மலபார் சபை சார்பில் நடைபெற்று வரும், இணையதள திருத்தொண்டுப் பணிகளானது, புது முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் பலனாக, விரைவில், ஆண்ட்ரோய்ட செயலி (App) ஒன்றை வெளியிட உள்ளது. அது விரைவில் பயன்பாட்டுக்கு வரும்.

**கட்டுமானப் பணிகள்:**

களியல், பளுகல், அதங்கோடு, மஞ்சாலுமூடு ஆகிய பங்குகளில் புத்தாலயம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மறை மாவட்டத்திற்கு சொந்தமான சூசைபுரம் புனித அல்போன்சா அறிவியல் மற்றும் கலை கல்லூரியில், கூடுதல் வகுப்பறைகள் தேவைப் படுவதால், கூடுதல் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கல்லூரியோடு இணைந்து மாணவிகள் பயன் பெறும் வகையில் விடுதி ஒன்று SABS அருட்சகோதரிகளால் சூசைபுரத்தில் கட்டப்பட்டு வருகிறது. தக்கலை சங்கமத்தில், கூடுதல் அறைகள் கட்டும் பணிகள் முடியும் தருவாயை எட்டியுள்ளன. காரோடில் அமைந்துள்ள மனநல காப்பகத்திற்கான கூடுதல் கட்டு மானப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

# மறைவட்ட செய்திகள்

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

### மாலைக்கோடு

* மாலைக்கோடு ஆலயத்தில் 5.2.2017 அன்று மிஷன் லீக் இயக்க மாதாந்திர கூட்டம் நடைபெற்றது. அதில் மாணவ மாணவிகளின் கலைப்போட்டிகள் நடைபெற்றன.

* 12.2.2017 அன்று மாலை 3 மணியளவில் மாதார் ஜோதிஸ் சார்பாக கணவர்களை இழந்த பெண்மணிகளுக்காக (விதவை) கூட்டம் நடைபெற்றது. அனுவபங்கள் பகிர்ந்தனர்.

* 24.2.2017 வெள்ளிக்கிழமை இறந்தவர்களுக்கான நினைவுத் திருப்பலியும், ஒப்பீசும், கல்லறை மந்தரித்தலும் நடைபெற்றது.

* உறவியம் சார்பாக நோயாளிகளை சந்தித்து அவர்களுக்காக செபித்ததோடு பொருளுதவியும் செய்யப் பட்டது.

* தவக்காலத்தை முன்னிட்டு ஒவ்வொரு உறவியங்களில் சிலுவைப் பாதையும், தியானமும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது

### மஞ்சாலுமூடு

* 11.2.2017 அன்று இளையோர்களுக்கான இரவு ஆராதனை நடைபெற்றது.

* ம ஞ் சா லு மூ டு அருட்சகோதரிகள் இல்லத்தில் 7 அருட்சகோதரிகளின் பொன்விழா ஆயர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

* 10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களுக்கு அச்சமின்றி தேர்வெழுதுவது பற்றிய கருத்தரங்கை திரு ஜெஸ்டஸ் ஆசிரியர் அவர்கள் நடத்தினார்கள்.

* 25.2.2017 அன்று மறைவட்ட தியானம் நடைபெற்றது

### முக்கூட்டுக்கல்

புனித மரியன்னை இளங் குருமடத்தில் ஹோம் டே 24.2.2017 அன்று ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைத்து அருட்தந்தையர்களும் கலந்து கொண்டனர். கலைநிகழ்சிகளும் நடைபெற்றது.

### பள்ளிக்கோணம்

15.1.2017 அன்று பள்ளிக்கோணம் திரு இருதய ஆலயத்தில் சபை நாள் விழா நடைபெற்றது. இந்நிகழ்விற்கு முன்னாள் பங்குத்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில் அவர்கள் தலைமையில் திருப்பலி அர்ப்பிக்க, அருட்தந்தை பிரின்டோ அவர்கள் மறையுரையுமாற்றினார்.

## சூசைபுரம் மறைவட்டம்

### புதிய ஆலய அடிக்கல் நாட்டுவிழா

தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயம் 60 குடும்பங்களுடன் செயல்பட்டு வருகிறது. கடந்த

5 ஆண்டுகளாக புதிய ஆலயம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தற்போதைய பங்குத்தந்தை அருட்தந்தை வின்ஸ்லால் மற்றும் பங்குமக்களின் முழு முயற்சியின் பயனாக புதிய ஆலயம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா 26.02.2017 அன்று மாலை 5 மணிக்கு நடைபெற்றது. மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் திருப்பலி அர்ப்பித்து, புதிய ஆலயம் அமைவிடத்தில் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் பேரருட்தந்தை பௌத்துப்பறம்பில், பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ், சூசைபுரம் மறைவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்குமக்கள் மற்றும் ஊர்மக்களும் கலந்துகொண்டனர்.

மாங்கரை

* மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத்தில் 19.2.2017 அன்று இளைஞர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கை மறைமாவட்ட இளை இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் வழிநடத்தினார். 28 இளைஞர்கள் பங்கேற்றனர்.

* திருத்தொண்டுக்குழு எல்லா ஞாயிற்றுக்கிழமைகளில் பங்குத்தந்தையோடு இணைந்து இல்லங்கள் சந்தித்து செபித்து வருகின்றனர்.

* 05.02.2017, 12.2.2017 ஆகிய தேதிகளில் புனித லூர்துமாதா, பொன்னதத் உறவியங்களின் ஆண்டுவிழா நடைபெற்றது.

பாலப்பள்ளம்

* பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலய நர்சரிப் பள்ளி, மறைவட்ட அளவில் நடைபெற்ற கலைப் போட்டியில் இரண்டாமிடத்தை பெற்றது.

* கல்லறை சிற்றாலய முதல் ஆண்டுவிழாவை முன்னிட்டு இறந்தோர் நினைவுத்திருப்பலி, செபமாலைப் பவனி, அன்பின் விருந்து ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றது.

* 21.02.2017 அன்று நடைபெற்ற பங்குப்பேரவை கூடுகையில் புதிய கைக்காரர்கள் மற்றும் உறவிய பணியாளர் தேர்வு செய்யப்பட்டனர்.

பிளாங்கரை

* பிளாங்கரை புனித லொரோட்டா மாதா ஆலய மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், தங்கள் பங்கின் வளர்ச்சிக்காக வகுப்பு வாரியாக ஆராதனை நடத்தி சிறப்பித்தனர். சிறுது காலமாக தொய்வடைந்த நிலையிருந்த உறவியக் கூட்டம் பங்குத்தந்தையின் முயற்சியால் தற்போது புதுப்பொலிவு பெற்று செயல்பட்டு வருகிறது.

* மாதர் ஜோதிஸ் புதிய உறுப்பினர்கள் தேர்வு

நடைபெற்றது. தவக்காலத்தில் வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாதை மற்றும் சிறப்பு நற்கருணை ஆராதனையும் நடைபெறுகிறது. மேலும் அனைத்து நாட்களிலும் காலை 6 மணிமுதல் 6.30 மணி வரை பாவசங்கீர்த்தன வசதியும் செய்யப்பட்டுள்ளது.

* கிள்ளியூர் புனித தேவமாத ஆலய இளைஞர்களின் சுற்றுலா 25.02.2017 அன்று நடைபெற்றது.

## நித்திரவிளை மறைவட்டம்

### முஞ்சிறை

முஞ்சிறை ஆலய மரியாயின் சேனை இயக்கத்தின் ஒருநாள் கருத்தரங்கு 19.2.2017 அன்று அன்பகத்தில் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைவரும் அன்னை மரியா வழியாக இறைவனளித்த நன்மைகளை நினைத்து இறைவனை புகழ்ந்தனர். பின் கலைநிகழ்ச்சிகள் வழியாக முதியோர்களை மகிழ்வுறச் செய்து சிற்றுண்டியும் வழங்கினர். 20 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

9.2.17 அன்று இறையடி சேர்ந்த முன்னாள் குருகுல முதல்வர் பேரருட்தந்தை பிலிப் கொடியந்தறா அவர்களின் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. தந்தை அவர்களின் ஆத்தும இளைப்பாற்றிக்காக செபித்தனர்.

1.3.17 அன்று காலை 12ஆம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களுக்காக சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. பிற சமய மாணவர்களும் கலந்து கொண்டு செபித்தனர்.

### கிறிஸ்துராஜபுரம்

ஜெயமாதா மெட்ரிக் பள்ளியின் 12வது ஆண்டுவிழா ஆயர் அவர்கள் தலைமையில் 03.2.2017 அன்று நடைபெற்றது. பள்ளித் தாளாளர் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக கிள்ளியூர் சட்ட மன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ராஜேஷ் குமார், லட்சுமிபுரம் கல்லூரி முதல்வர் முனைவர் டேவிட் ராஜ போஸ் கலந்துகொண்டு வாழ்த்துரையாற்றினர். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் முனைவர் அல்டோஸ் அவர்களும் வாழ்த்திப் பேசினார். ஆயர் அவர்கள் தலைமையுரையில் ஞானத்தோடு உழைத்தாலே வெற்றி பெற இயலும் அதற்காக செபிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். மாணவ மாணவிகளின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

11.2.2017 சிறப்பு நற்கருணை ஆராதனை, தியானம், ஒப்புரவு வழிபாடு நடைபெற்றன.

### நித்திரவிளை

19.2.2017 அன்று காலை திருப்பலிக்குப் பின் கருணை

இல்லம் எ.எஸ்.எம்.ஐ அருட்சகோதரிகள் இல்லத்தில் அருட்சகோதரி மெர்சி அவர்களின் பிரிவு உபச்சார விழா நடைபெற்றது 12 ஆண்டுகள் அரும்பணியாற்றி தற்போது எ.எஸ்.எம்.ஐ-யின் தலைமை சகோதரியாக பணி உயர்வு பெற்று மாற்றலாக செல்கின்ற அருட்சகோதரி அவர்களை பக்த இயக்க பொறுப்பாளர்களும், பங்கு மக்களும் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினர்.

தகவல் சேகரிப்பு, திருமதி.ஹேமா/சினேக லதா/செலின் மேரி

## புனிதர் நிலை படிகளுக்கென 8 இறையடியார்களின் பெயர்கள்

புனிதர் பட்டம் பெறுவதற்குத் தேவையான வழிமுறைகளுக்கு தகுந்தவர்களென எட்டு இறையடியார்களின் பெயர்களை பிப்ரவரி 27 திங்களன்று, திருத்தந்தையிடம் சமர்ப்பித்தார், கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ.

1969ம் ஆண்டு தன் கிறிஸ்தவ விசுவாசத்திற்காக கொல்லப்பட்ட சலேசிய சபையின் இறையடியார் அருள்பணி Tito Zeman, மற்றும் தங்கள் வீரத்துவ பண்புகளுக்காக, சலேசிய சபையின் இறையடியார் ஆயர் Ottavio Ortiz Arrieta, காதுகேளாதோர் மற்றும் வாய்பேச இயலாதோருக்கென அன்னை மரியா பெயரில் அமைப்பு ஒன்றை உருவாக்கிய இறையடியார் அருள்பணி Antonio Provolo, இறைமீட்பர் அருள்கன்னியர் சபையை தோற்றுவித்த இறையடியார், இயேசு சபை அருள்பணி Antonio Repiso Martínez, இயேசு கிறிஸ்துவின் திருஇதய மறைபோதக பணியாளர்கள் சபையை உருவாக்கிய இறையடியார் அருள்சகோதரி Maria della Mercede Cabezas Terrero, பிறரன்பின் அடிமைகள் அருள்சகோதரிகள் என்ற துறவு சபையின் இறையடியார், அருள்சகோதரி Lucia dell'Immacolata, 1978ல் இறையடி சேர்ந்த, பொதுநிலை விசுவாசி, இறையடியார் Pietro Herrero Rubio, 1998ல் மரணமடைந்த, குடும்பத்தலைவர், இறையடியார் Vittorio Trancanelli ஆகியோரின் பெயர்கள், புனிதர் பட்ட நிலைக்கென திருத்தந்தையிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

# BISHOP'S ENGAGEMENTS MARCH 2017

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | 09.30 am | Bishop's House :Curia Meeting |
| 2 | Thu | | Bishop's House |
| 3 | Fri | 09.00 am | Sangamam: Goodness TV Recording |
| 4 | Sat | 02.30 pm | Soosaipuram: KKSSS SHG Anniversary |
| **5** | **Sun** | **07.00 am** | **Thettiyode: Holy Qurbana >> Kottayam** |
| 6 | Mon | 03.00 pm | Kudamaloor: Mass for Rev. Fr. Joseph Karimpalil |
| 7 | Tue | | Shenkottai Mission Visit |
| 8 | Wed | 02.30 pm | Kalluvilai: KKSSS SHG Anniversary, |
| 9 | Thu | 10.00 am<br>04.30 pm | Alphonsa College English Dept. Seminar<br>Anniversary of Nambikkai Alayam |
| 10 | Fri | 11.00 am | St. Alphonsa College Sports Day |
| 11 | Sat | 09.30 am<br>02.30 pm | Nattalam: Annual day at Lourdes Mount English College<br>Muzhucode: KKSSS SHG Anniversary |
| **12** | **Sun** | **08.00 am**<br>**02.00 pm** | **Padanthalumoodu: Vincent de Paul Golden Jubilee**<br>**Arukani: World Women's Day celebration- KKSSS** |
| 13 | Mon | 06.00 pm | Visit to Minor Seminary for Conference |
| 14 | Tue | 11.00 am | Kanjirapally: Inter Diocesan Meet |
| 15-16 | Wed | | Bishop's House |
| 17 | Fri | 11.00 am | St. Alphonsa College Annual Day |
| 18 | Sat | 02.00 pm<br>05.00 pm | Visit of Mr. Justin, TVM<br>Anayadi: SJSM Sisters Feast Day |
| **19** | **Sun** | **12.00 am** | **Kumali: Holy Qurbana** |
| 20-21 | Mon | 09.30 am | Sangamam: Orientation Programme for Priests |
| 22 | Wed | 09.30 am | Bishop's House :Curia Meeting |
| 23-25 | Thu | | Bishop's House |
| **26** | **Sun** | **08.15 am** | **Vayalinkarai: Pastoral visit** |
| 27 | Mon | | Bishop's House |
| 28 | Tue | 04.00 pm | Vellaradai: Holy Qurbana at Kurisumalai, |
| 29-31 | Wed | | Bishop's House |

**Fr. Thomas Sathianesan**
Eparchial Secretary



Anjoe Bible Nursery - Munchirai



Golden Jubilee - SDS Sisters



Golden & Silver Jubilee - SABS Sisters





நித்திரவிளை கருணை இல்லத்தின்
நிர்வாக அன்னையாக செயலாற்றி வந்த
அருட்சகோதரி மேர்சி அவர்கள்,
எ.எஸ்.எம்.ஐ. துறவறச் சபைத் தலைவியாக
தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.





முன்னாள் குருகுலமுதல்வரும்
மறைமாவட்டப் பரிபாலகருமாக இருந்த
பேரருட்தந்தை பிலிப் கொடியந்தறா
அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு
நாள் திருப்பலி, பிப்ரவரி 10, 2017 அன்று
அவருடைய தாய்ப்பங்கான காயல்புறத்தில்
வைத்து நடைபெற்றது. திருப்பலிக்குப்
பிறகு, கல்லறையில் ஒப்பீசு சொல்லி
செபிக்கப்பட்டது.

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

**For Private Circulation only**

Published By : Fr. Joseph Santhosh, for the Diocese of Thuckalay
Bishop's House, Post Box No . 12, Thuckalay - 629 175
Printed at : Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570